முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1023

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.07.2022, திங்கட்கிழமை

1. ஆறுமுக ஞானியே அரங்கா வாழ்க
அன்னதான வள்ளலே தேசிகா வாழ்க
மாறுதலை இந்த உலகில் செய்வேன் என
மண்ணுலகில் என் அவதாரமாக வந்த ஐயனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 02 நாள், 18.07.2022 திங்கட்கிழமை)
தாழ்விலா அரங்கன் திருவடி பற்ற
தரணியோர்க்கு ஜீவமுக்தி உறுதி உறுதி
3. உறுதிகொண்டு அரங்கன் தர்மத்தை ஏற்றால்
ஊழ்வினையை வெல்லும் சக்தி உறுதிஉறுதி
உறுதிகொண்டு அரங்கன் சன்மார்க்கத்தை ஏற்றால்
இந்த உலகையே வெல்லும் சக்தியும் உறுதியாகும்
4. ஆகவே அன்பர்கட்கு ஆறுமுகன் யான்
ஆற்றல்பட அரங்கன்வழியே சக்தியை இன்பமான தீட்சையாக தர்மமாக
இணையில்லாத சன்மார்க்கமாக அருளிவர
ஏற்று உலகோர் அரங்கன் திருவடி பணிந்தால்
5. பணிந்திட பரிபக்குவ ஞானம்
பரமானந்த பெருநிலை இனிதே உருவாகி
ஆக்கமுடன் இந்த கலி இடர்களை எல்லாம் வெல்லும்
ஆற்றலும் அற்புதமும் அதீத சக்தியும் கூடி
6. கூடியே உலகோர் ஞானிகள் ஆகக்கூடும்
குரு அரங்கனால் இந்த மாற்றம் காண நேரும்
நேர்மைகொண்டு அரங்கனுள் நிலமதனில் தர்மவேலிக்குள் இணைந்துவர
வருகவே வையகத்தில் அற்புதம் நடக்கும் வருவோர்க்கு இனி பிறவா பெரும்பேரு கிட்டும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–